செய்திக்குறிப்பு எண் - 55 நாள்:- 22.02-2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.2.2013

சென்னை பெருநகர காவல், அமைந்தகரை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. T.வெங்கட்ராமன் அவர்கள் 17.2.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.அசோகன் அவர்கள் 18.2.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C. நாகராஜன்அவர்கள் 16.2.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, பேருந்து மோதி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 20.2.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. வெங்கட்ராமன் மற்றும் திரு. அசோகன், தலைமைக் காவலர் திரு. நாகராஜன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. வெங்கட்ராமன் மற்றும் திரு. அசோகன், சாலை விபத்தில் காலமான தலைமைக் காவலர் திரு. நாகராஜன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9